மறுமலர்ச்சிப் பாதையில்

மக்கள் கலைகள் III

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

# மாவை முருகன் காவடிப் பாட்டு



த. சண்முகசுந்தரம்

அருள் வெளியீட்டகம்

294.5
சண் மு

மறுமலர்ச்சிப் பாதையில்

*மக்கள் கலைகள் III*

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

மாவை முருகன்

# காவடிப் பாட்டு

த. சண்முகசுந்தரம்

EVELYN RUTNAM LIBRARY
362
JAFFNA

அருள் வெளியீட்டகம்
மாவை கந்தசாமி கோவிலடி
தெல்லிப்பழை
இலங்கை
10-8-81

எல்லா உரிமையும் ஆசிரியருக்கு

2945
[Tamil handwriting]

MARUMALARCHI PATHAIYIL

MAKKAL KALAIKAL III

*Folk Literature in the Path of Revival.*

# MAVAI MURUKAN KAVADI SONG

BY

T. SANMUGASUNTHARAM, B. A. (CEY.)
DIP - IN - ED. (CEY.)

*Printers*

Kugan Press,
Tellippalai.

*Publishers*

Arulveliettakam
Mavai Kanthasamy Kovilady
Tellippalai
Sri Lanka
10-8-81

*Price* **Rs. 2/50**

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY-
JAFFNA

# காவடிக் கலை

தமிழ்க் கலைகளை வேத்தியல் பொதுவியல் என்ற இரண்டு பிரிவிலே பிரித்துப் பார்ப்பது வழக்கம். பொது மக்களின் கலை பொதுவியலில் அடங்கும். பொதுமக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளே பொதுவியற்கலைகள் தோன்றுவதற்குக் காலாக இருந்தன. பொதுவியற்கலைகளே மெருகு பெற்றுக் காலகதியில் வேத்தியல் ஆயின. கலைக்கும் கடவுள் வழிபாட்டிற்கும் தமிழில் நெருங்கிய தொடர்புண்டு. கிராம மக்களின் வாழ்க்கையிற் கடவுள் வழிபாடு மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றது. பண்டைக்காலத் தமிழ் மக்கள் தமக்கென வீட்டைக் கட்டினர். இது "இல்" ஆயிற்று. அம்மக்கள் கடலை நோக்கினர்; மலையை நோக்கினர்; ஆற்றை நோக்கினர்; வயலை நோக்கினர்; காட்டை நோக்கினர்; அந்த நோக்குக்கு அப்பால், காலத்தால் அழியாத வலுவுடைய பெரும்பொருள் உண்டு என்பதை உணர்ந்தனர். அதற்குக் "கோ" என்ற பெயரைக் கொடுத்தனர். அந்தப் பெரும் பொருளுக்கு "இல்" ஒன்றை அமைத்தனர். அது "கோயில்" ஆயிற்று. "கோ" என்னுமிடத்து முருகன் என்ற கடவுளைப் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். தமிழ் மக்களுக்குச் சிறப்பான கடவுள் முருகன். பழந்தமிழிலக்கியங்களில் முருகனைப்பற்றிய குறிப்புக்கள் நிறையவுண்டு. முருகனே அழகுக் கடவுளாயினன். இவனே தமிழ்க்கடவுளும் ஆயினன். இவனே வேலேந்தும் செவ்வேள் ஆயினன். "வினையைக் கடிவது வேல்" என்ற மெய்ப்பொருள் பிற்காலத்தில் வலியுற்றது. குழந்தைவடிவேல் என்ற பெயருமுண்டாகியது.

கோவிற்கு இல்லம் அமைத்த தமிழ் மக்கள் தங்கள் இன்பதுன்பங்களையெல்லாம் அந்தக் கோவிலின் முன்னர் சென்று ஒப்படைத்தனர். துன்பங்களைக்கூறி முறையிட்டனர். தங்கள் முட்டுத்தீர அழுதனர், புலம்பினர். வயல் விளைய மழை வேண்டும். வெய்யில் வேண்டும்; காற்று வேண்டும். இவற்றை இயக்குவிக்கவும் வருவிக்கவும் பெரும் பொருள் ஒன்று உண்டு என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். பகலவன் பெரியவன். அவனிலும் பார்க்கப் பெரியவன், கோயில் கொண்டருளும் பெரும்பொருள். வயலிலே தோட்டத்திலே விளைந்தவை யாவும் பெரும் பொருளின் அருளால் விளைந்தவை. எனவே, அப்பொருட்களைக் கோவிலுக்கு எடுத்துப் படையல் செய்தனர். பண்டைய மக்கள் புது நெல்லையும், தினையையும் எடுத்துப் பொங்கல் படையல் செய்தனர்.

"உன் அருளாலே விளைந்தவற்றை உனக்குப் படையல் செய்கிறேன்" என்பதே படையலின் நோக்கம். அப்படிப் பொருள்களை வீட்டிலே இருந்து கோவிலுக்கு எடுத்துச் செல்லக் காவுதடிகளைப் பயன்படுத்தினர். இந்தக் காவுதடிகளின் இருபக்கத்திலும் பழம், பால், நெற்கதிர், தினைக்கதிர் என்பவற்றைக் கட்டித் தொங்கவிட்டனர். அப்படித் தொங்கவிட்ட காவுதடிகளை எடுத்துச் செல்லும்போது ஆடலும் பாடலும் இடம்பெற்றன. "வேலா! வேலா!; விறகுதடி, வேலன் பெண்டில் காவுதடி" என்ற மக்கள் பாடல் இங்கு நோக்கற்பாலது. காவுதடி எடுத்துச் செல்லும்போது பறை முதலாம் இசைக்கருவிகளும் ஒலிக்கப்பட்டன. நாளடைவிலே காவுதடிக்கு அழகு ஏற்றும் வண்ணப் பூக்களும், மயிற்பீலிகளும் சேர்க்கப்பெற்றன. "காவுதடி" என்னும் உழவர் காணிக்கையே நாளடைவில் "காவடி" என்றாயிற்று. காவடி எடுக்கும் நோக்கம் கடவுளருக்கு நன்றி செலுத்தல் என்ற நிலை ஏற்பட்டது. புயல், வரட்சி என்பவைகளைத் தவிர்த்து நிலத்தை விளையச் செய்ப

வன் கடவுள். அவனுக்கு நன்றிக்கடன் தெரிவிப்பதே காவடியின் முதல் நோக்கம். அதற்குப் பிற்காலத்தில் மெய்ப்பொருள் அடிப்படையில் விளக்கங் கொடுக்கப்பட்டது.

ஈழத்திலே புகழ்பெற்ற முருகன் கோயில்கள் இருக்கின்றன. கதிர்காம முருகன், மாவிட்டபுரம் முருகன், நல்லூர் முருகன், செல்வச்சந்நிதி முருகன், மண்டூர் முருகன் என்பவை இன்று ஈழத்திற் புகழ் பெற்ற முருகன் கோயில்கள். சிறிய அளவில் அமைந்த முருகன் கோயில் பலவும் இருக்கின்றன. இந்தக் கோயில்களிலே திருவிழாக்காலங்களிற் காவடி எடுப்பது பொதுமக்களின் வழக்கம். ஏனைய கோயில்களுக்கும் காவடி எடுப்பதும் மரபு. இருந்தும் முருகன் கோயிலுக்குக் காவடி எடுப்பதே இன்றும் சிறப்பாகக் கருதப்படுகின்றது.

ஈழத்திற் காவடி பழகிக் காவடி எடுத்துக் காவடி இறக்குவது வரையும் உள்ள முறைகளைச் சுருக்கமாக ஆராயலாம். காவடி எடுப்பதின் இன்றைய நோக்கம் நன்றிக்கடன் தெரிவிப்பது. ஒருவர் நோயில் இருந்து தப்பினால், நற்பேறு அடைந்தால், உத்தியோக உயர்வு பெற்றால், மக்கட்பேறு கிடைத்தால் நீதிமன்ற வழக்கில் வெற்றி பெற்றால் காவடி எடுத்து அவியல் செய்து அன்னதானம் வழங்குவர். வேறு சிலர் ஆண்டுதோறும் தமது குலதெய்வத்திற்கு விழாக்காலங்களிற் காவடி எடுத்துச் செல்வது வழக்கம். சில வேளைகளில் ஒரு கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாகக் காவடி எடுத்துச் செல்வர். அந்தக் காவடிக் கூட்டத்திற்கு அந்த ஊர்ப் பெயரைச் சொல்லியழைப்பது வழக்கம். எடுத்துக்காட்டு, அளவெட்டிக் காவடி.

காவடியைப் பலவகையாகப் பிரிக்கலாம். ஆட்டக் காவடி, பாட்டுக் காவடி, செடில் காவடி, முள்ளு மிதிதடிக்காவடி, பறவைக் காவடி, அந்தரக் காவடி,

பாற் காவடி, பிள்ளைக் காவடி, பிரதட்டைக் காவடி என்பன அவை. சாதாரணமாக ஒருவர் ஆட்டம் இடம் பெறாத காவடியை எடுத்துத் தன் நேர்த்திக் கடனைத் தீர்ப்பதற்கு எவ்வித பயிற்சியும் தேவை யில்லை. முதியவர்களும், குழந்தைகளும் காவடியைத் தம் குலதெய்வத்தின் கோயிலில் இருந்து எடுத்து முருகன் கோயிலில் இறக்குவர். இதற்கு எந்த வித மான பயிற்சியும் தேவையில்லை. காவடியிற் காணிக் கையாகப் பாற் செம்பு கட்டப்பட்டிருக்கும். ஊரில் உள்ள நாதசுரக் கலைஞர்கள் இசை பொழிந்தபடியே காவடியுடன் செல்வர். கோயிலுக்குக் காவடி வந்த தும் அந்தணர் ஒருவர் நின்று காவடியை இறக்கு வர். இத்துடன் வழிபாடு முடிவுறும். விரதம் அனுட் டித்த காவடிக்காரர் தன் வீட்டிற்குப்போய் அன்ன தானஞ் செய்து தன் விரதத்தை முடித்துக் கொள் வர். காவடி எடுப்பதற்கு உற்றார் உறவினர்களை வீடு வீடாகச் சென்று அழைப்பதும் பின்னர் அவர்களுக்கு உணவு வழங்குவதும் வழக்கம்.

ஆட்டக்காவடி பழக்கும் கலைக்குத் தனி மரபு உண்டு. இந்த மரபுகளைப்பற்றிக் காவடி கரகக் கலை களிற் கைதேர்ந்த முதுபெரும் கலைஞர்கள் அம்பனை உடுக்குப் பாட்டுக் கலைமணி சீ. சிதம்பரப்பிள்ளை, அளவெட்டி கரகதிலகம் மு. ஐயாத்துரை என்பவர் கள் மிகவும் விபரமாக இந்தக் கட்டுரை ஆசிரியர் தொகுத்த " கலையும் மரபும் " என்ற நூலிலே கூறி யுள்ளார்கள். ஆட்டக் காவடி தனிக்கலை. அதனைப் பழக்குபவர் " அண்ணுவியார் ", " பண் ஆள்வி யார் " என்ற சொல் " அண்ணுவியார் " என மரு வியது. என்பர். ஆட்டக்காவடி பழகப் போகின்ற வர்களுக்குப் புத்தாண்டை ஒட்டி வருகின்ற நல்ல வேளையிற் காலிற் சலங்கை கட்டப்படும். இந்த வைபவம் வீட்டிலும் குலதெய்வத்தின் கோயிலிலும் நிகழலாம். அதன் பின்னர் காவடி ஆட்டத்தை

முறையாக மூன்று நான்கு மாதகாலம் இளைஞர்கள் பழகுவார்கள். முருகன் கோயில் கார்த்திகைத் திருவிழா, தேர்த்திருவிழா முதலியவற்றின்போது காவடி எடுத்துச்செல்லப்படும்.

காவடிக்கு இசைக்கப்படுகின்ற இசைக் கருவிகளைப் பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். பெரும்பாலும் நாதசுரமும் தவிலும் உபயோகிக்கப்படுகின்றன. இதற்குக் காவடி மேளம் என்ற பெயருண்டு. இந்த இசைக்குத் துடிப்புண்டு. உயிர்ப்புண்டு. "காவடி மேளம் கலகலத்துப் பேசும்" என்பது பழமொழி. பறையை உபயோகித்துக் காவடி எடுப்பதும் வழக்கம். பறை அமங்கலமான வாத்தியமாகக் கருதப்பட்டபோதிலும் ஈழத்துக் கோயில்களிற் பொங்கல், படையல், விழாக்கள், காவடி ஆட்டம் என்பனவற்றுக்குப் பறைமேள இசை பயன்படுத்தப்படுகின்றது என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். "சாப்பறை" அமலங்கலமானது. பொங்கற்பறை, காவடிப்பறை, உருவாட்டப்பறை, குளிர்ந்திப்பறை என்பவை தெய்வத்திற்குரியவை. மத்தளம், கைத்தாளம், கெஞ்சிரா என்பவற்றுடன் அண்ணாவியர் காவடிச்சிந்து பாடவருவது "பாட்டுக் காவடி". அண்மைக் காலத்தில் ஆர்மோனியம் இந்த இசைக்குழுவுடன் இடம்பெற்றுள்ளது. உடுக்குப்பாட்டுக் காவடியின்போது இரண்டு மூன்று உடுக்குப்பாட்டுக் கலைஞர்கள் உடுக்குப்பாட்டைப் படித்துக்கொண்டு வருவார்கள். காவடி எடுப்பவர் அதற்கு ஏற்ப ஆடிக்கொண்டு வருவார். "அரகர குழந்தை வடிவேலா" என்று உடுக்குக் கலைஞர்கள் முருகன் புகழ் பாடுவர். செடிற் காவடி என்பது உடலிலே வேல்களையும், முட்களையும் செலுத்தி ஆடிவருவதாகும். அண்ணாவியார் செடிலைப் பிடித்துக் காவடியை ஆடவைப்பர். காவடிக்குப் பின்னால், பெண்கள் பாற்செம்பு, சாம்பிராணிச்சட்டி, கற்பூரச்சட்டி என்பவற்றை எடுத்து நேர்த்திக்கடன் கழிப்பர். ஊர் இளைஞர்கள் சேர்ந்து எடுக்கின்ற

காவடிச் செலவை அந்த ஊரில் உள்ளவர்கள் கொடுப்பதும் வழக்கம். காவடிக்குத் திருப்புகழ், சிந்து, பள்ளு, கப்பற்பாட்டு பாம்பாட்டிப்பாட்டு மெட்டுகள் கையாளப்படுவது மரபு. இப்பொழுது திரைப் படங்களில் உள்ள மெல்லிசைப் பத்திப்பாடல் மெட்டுகளும் கையாளப்படுகின்றன. கே. பி. சுந்தரம்பாளின் பாட்டுகளை இங்கு குறிப்பிடலாம். தாளவாத்தியங்களில் உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய தன்மையுண்டு.

நாளடைவிற் காவடிக்கு மெய்ப்பொருள் அடிப்படையில் விளக்கம் கொடுக்கப்பட்டது. " உயிரைப் படைத்தவன் நீ. உடலைப் படைத்தவன் நீ. குரலைக் கொடுத்தவன் நீ. பாடலைத் தந்தவன் நீ. பாட வைப்பவன் நீ. " என்பதே காவடியின் உட்பொருள். முருகனுக்குரிய பறைவைகள் மயிலும், கோழியும். மழைகண்டு கூவுதலும், ஆடலும் செய்பவை மயில். பகலவனைக் கண்டு கூவுவது சேவல். மயில் களிப்புடன் ஆடி அடங்கும். காவடியில் மயில் இறக்கைகளைச் சேர்த்து ஆடுவர். சூரபன்மனின் ஆணவம் அடங்கி அவன் மயிலானதைக் காவடி மயிற்பீலி உணர்த்தும் என்பர் ஒரு சாரார். பக்தன் ஒருவன் ஓர் ஆண்டிலே ஒரு முறை தன் ஆணவத்தை அடக்கி முருகன் முன்னிலையிற் காவடியுடன் திருவடியில் வந்து தன்னை ஒப்புவிக்கின்ருன். அத்துடன் உடலிலே வேலைப்பாய்ச்சி முள்ளுமிதிதடியில் நடந்து வருவர். " அப்பனே ! உன்ஞல் உண்டாக்கப்பட்டது இந்த உடல். அதனை உன் பெயரைச் சொல்லி வருத்தி உன்னை நினைத்து உருகி ஆடிப்பாடி வருகிறேன். " என நினைக்கின்ருன். இதுதான் செடிற் காவடியின் மெய்ப்பொருள்.

காவடியைப் பழக்குபவர்களும், காவடியைக் கட்டிவைத்து வாடகைக்குக் கொடுப்பவர்களும் பெரும்பாலும் வீரசைவர்கள். இவர்களைப் " பண்

டாரம் " என்றும் அழைப்பதுண்டு. இந்த வீரசைவ குலத்தவர்கள் ஈழத்தில் தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டு செய்து வந்துள்ளனர். இலங்கையைப் போர்த்துக்கேயர். ஒல்லாந்தர் ஆகியோர் ஆண்டகாலம் [ 1505 — 1796 ] சைவம் நசுக்கப்பட்டது. ஆனாலும் இந்த வீரசைவர்கள் கூத்து, பாட்டு பண், தேவாரம் போன்றவைகளை வளர்த்தனர். இவர்களிலே தலை சிறந்த பூசாரிகள்இருந்து பூசை நடத்தி வந்தனர். காவடிக்கலையைப் போற்றிப் பேணி வளர்த்த பெருமை இவர்களுக்குண்டு.

சமுதாயத்திலே அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலுமே பல மாற்றங்கள் நிகழ்கின்றன. மக்களின் சமுதாயக் கணிப்புகளும் கருத்துக்களும் மாறுகின்றன. இருந்த போதும் கடவுட்பற்று அதிகம் மாறுவது போலத் தெரியவில்லை. அதனாலே தான் காவடிக்கலை ஈழத்தில் மங்காமலிருக்கின்றது. விடிய விடிய நடக்கின்ற கூத்தைப் பார்க்க இன்று மக்களுக்கு அவகாசம் இல்லை. ஆனால் ஆண்டுக்கொருமுறை நிகழ்கின்ற கோயில் திருவிழாக்களிற் காவடி எடுக்கின்ற வழக்கம் இப்பொழுதும் பொலிவுடன் அமைந்துள்ளது. கைபிடியாமல் கரகத்தை முதுகிலே வைத்து ஆடுவதும் ஆடி ஆடி உரலிலே உருட்டி ஆடுவதும் ஈழத்திற் "கரகக்காவடி" எனப்படும். இதனை ஆடுவதற்குப் பல காலம் பயிற்சி பெறவேண்டும். இப்படியான ஆட்டத்தைப் பயின்று வெற்றியுடன் நிகழ்ச்சிகளைக் கலைஞர்கள் கோயில்களில் நிகழ்த்தி வருகின்றனர். இவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவும் சன்மானமும் நிறையவுண்டு.

" கலைக்கண் " 23-4-74

# ஈழத்தில் காவடிப்பாட்டு

ஈழத்தில் காவடிக்கலை இன்னும் வாழும் கலையாக, முருகனுக்குரிய கலையாக இருந்துவருகின்றது. காவடி எடுத்து முருகனைச் சேவித்தல் மிகப் பழைய காலத்திலிருந்தே இந்த நாட்டிலே இருந்து வருகின்றது என்பர்.

காவடியை எடுத்துச் செல்லும்போது பாட்டுப் படிப்பது வழக்கம். இப்பாடல் யாவும் முருகன் புகழையே எடுத்து இயம்பும். இந்தப் பாடலை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

(அ) நடைசாரிப்பாட்டு

(ஆ) ஆட்டப்பாட்டு

முதலில் நடைசாரிப் பாட்டை ஆராயலாம். கிராமத்து முருகனடியார்கள் தமது குலதெய்வத்தின் கோயிலில் இருந்து முருகன் கோயிலுக்குக் காவடியை எடுத்துச் செல்வர். காவடியைத் தாங்கிச் செல்லும் அடியார்கள் நடந்துபோகும்போது பாடப்படும் பாட்டு நடைசாரிப்பாட்டு. இந்தப் பாடல்களைக் கேட்டதும் அடியார்களின் களைப்பு அகலும்; அன்பு பெருகும். சாரி என்பதன் பொருள் உலாவுதல் 1 நடைசாரிப்பாட்டு இப்போதும் படிக்கப்படுகின்றது. இந்த இடத்தில் நடைசாரி மேளம் என்ற வழக்கை ஆராய்தல் நன்று. நடைசாரி மேளம் என்பது ஊர்வலமாகச் செல்லும் போது வாசிக்கப்படுகின்ற மேளம். இது யாழ்ப்பாணத்துச் சொல் வழக்கு 2. இதனைச் சென்னைப் பேரகராதி சுட்டிக் காட்டியுள்ளது.

ஆட்டப்பாட்டு என்பது காவடி ஆடும்போது பாடப்படுகின்ற பாட்டு. காவடிக்காரர் கூட்டம் கூட்டமாகப் போகும்போது முக்கியமான சந்திகள்,

EVELYN ... LIBRARY 368

பெரியோரின் இல்லம், வழியில் வருகின்ற கோயில் போன்ற இடங்களில் தங்கி நின்று ஆடுவர். இந்தப் பாடல் யாவும் ஆடலுக்கு ஏற்ற மெட்டைக் கொண்டிருக்கும்.

இங்கு இடம் பெறுகின்ற காவடிப் பாட்டு, முழுமையான அன்பு நெறிப்படம் ஒன்றை உருவாக்குகின்றது. அளவெட்டி காத்தவராயன் கோயிலிருந்து முருகனடியார்கள் காவடியை எடுத்து மாவிட்டபுரம் முருகன் கோயிலை நோக்கி மெய்யன்புடன் செல்கின்றனர். இதுவே பாட்டின் பொருள். அளவெட்டி என்ற ஊர் இசையின் தேக்கம் எனலாம். இங்கு வாழ்கின்ற இசை வேளாளர் பலர் பெரும் புகழ் பெற்றுள்ளனர். இப்பகுதி வீரசைவக் குலத்தவர் இசைச் சொற்பொழிவு, பண்ணிசை, புராண படனம், காவடி, கரகம், உடுக்குப்பாட்டு, கூத்து போன்ற கலைகளில் பெருஞ்சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இந்தக் கிராமத்திலுள்ள காத்தவராயன் கோயில் வாசலில் இருந்து காவடிகள் சாரிசாரியாகப் புறப்படுகின்றன. மாவை முருகன் திருவிழாக் காலத்து நடைபெறும் கார்த்திகைத் திருவிழா, தேர்த்திருவிழாப் போது காவடியை எடுத்துத் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர் அடியவர். இந்தக் காத்தவராயன் கோயில் இப்போது தவளகிரி அம்மன் கோயில் என்ற பெயரைப் பெற்றுள்ளது. ஈழத்தின் பல பாகங்களிலும் காத்தவராயன் வழிபாடு நிலவியது. காத்தவரரயன் கிராமியத் தெய்வம் என்பர் 3. காத்தவராயனைப்பற்றிக் கலைக்களஞ்சியம் மேல்வரும் குறிப்பைத் தருகின்றது.

" ஆரியமாலை, பொம்மி என்னும் இரு மனைவியருடன் மாரியம்மன் சன்னிதானத்தில் உள்ளவன். உமாதேவி தவஞ்செய்யும்போது பூங்காவனத்தைக் காக்கச் சிவபிரானல் உண்டாக்கப்பட்டவன். இவன்

முத்தம்மை என்னும் தேவதையின் மகன். நாரதர் கூறிய மூன்று அழகிகளைத் தந்திரத்தால் மணம் புரிந்தவன்.'' 4. இந்தக் காத்தவராயன் கூத்து ஈழத்தின் பல பாகங்களிலும் இன்று சிறப்பாக ஆடப் பட்டு வருகின்றது. இரவு இரவாக இந்தக் கூத்து நடைபெறும். காவடியை எடுத்துவருகின்ற முருகனடியார்கள் அம்பனை வைரவ கோயிலில் முன்பாக நின்று ஆடுகின்றனர். இந்தக்கோயில் மகாசனக் கல்லூரியின் அருகில் அமைந்துள்ளது. இதன் பூசகர் இன்றும் வீர சைவர் ஒருவரே. இவரின் பெயர் சிவநாதக் கலைமணி சீ. சிதம்பரப்பிள்ளை 5. இக்கோயில் முன்பாக ஆடிய பின்னர், அடியார்கள் அம்பனைவீதி வழியாக வந்து தெல்லிப்பழைச் சந்தியை அடைகின்றனர். சந்தியின் கிழக்குப் பகுதியில் உள்ள வீதியில் தெல்லிப்பழை மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. மகிமை பொருந்திய தாயாம் மாரியம்மனை நினைந்து காவடிக்காரர் ஆடுகின்றனர். அப்படியாடிய அன்பர்கள் மாவை முருகன் மேற்குக் கோபுரம் முன்பாக நின்று ஆடியபின்னர் கிழக்கு வாசலை வந்து அடைகின்றனர்: தங்கள் காவடியை இறக்கி நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். இதுவே இங்கு இடம்பெறுகின்ற பாடலின் பொருள்.

இப்படியான பாடல் பலவும் அளவெட்டிப் பகுதியில் இருந்தன. இவை பெரும்பாலும் செவி வழியாக வருவன. சில வேளைகளில் இப் பாடல்களைப் பிரதிசெய்து வைப்பதும் வழக்கம். இப்படியான பாடல்களை அந்தந்தநேரம் தேவைக்கு ஏற்ப ''இயைத்துப் பாடக்கூடிய'' அண்ணாவிமார் பலர் இருந்தனர். உடுக்கை வைத்துக்கொண்டு, எந்தவிதமான முன்னறிவித்தலுமில்லாமல் இவர்கள் சந்தங்கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

இங்கு இடம்பெறுகின்ற பாடலைப் பாடியவர் யாரெனத் தெரியவில்லை. இதனை எனக்குப் பாடிக் காட்டியவர் பண்ணிசைப் பேராசான் கீரிமலை த. செல்லையா. இவரும் வீரசைவர் 6. பாடல்களுக்கு விளக்கம் தந்தவர் அளவெட்டி கரகதிலகம் மு. ஐயாத்துரை. இவரும் வீரசைவர் 7. இவருக்கு என் உளப்பூர்வமான நன்றி. இப்படியான பாடல் பலவும் ஈழத்தின் பல பகுதிகளிலும் செவிவழியாக வருகின்றன; அல்லது கைஎழுத்து உருவில் இருக்கின்றன. இவற்றில் சிலவற்றையாவது அச்சுவாகனம் ஏற்றவேண்டும். அந்தப் பெரியதிட்டத்தின் முன்னோடியாகவே இச் சிறுமுயற்சி அமைகின்றது. அந்த நம்பிக்கையிலேயே இதனை அச்சேற்றுகிறேன்.

1. சென்னைப் பேரகராதி — தொகுதி 3 பக். 1387

2. யாழ் அகராதி வழக்கு; சென்னைப் பேரகராதி— தொகுதி 4 பக். 2146.

3. சென்னைப் பேரகரகதி — தொகுதி 2. பக். 860

4. கலைக்களஞ்சியம் — தொகுதி 3 பக். 469.
ப. அ. கிருஷ்ணசாமிப்பிள்ளை

5. "கலையும் மரபும்"-த. சண்முகசுந்தரம் பக்.27-35 சிதம்பரப்பிள்ளையின் நேர்முக உரைத் தொகுப்பு

6. "இசையும் மரபும்" —த. சண்முகசுந்தரம் பக். 17-24 பண்ணிசைப் பேராசான் கீரிமலை
த. செல்லையாவின் நேர்முக உரைத் தொகுப்பு.

7. "கலையும் மரபும்" — த. சண்முகசுந்தரம் பக். 36-41 ஐயாத்துரையின் நேர்முக உரையாடல் தொகுப்பு.

# நன்றியுரை

இந்த நூல் உருவாகும்போது என் நெஞ்சில் நிறைந்து வழிந்து நிற்பவர் ஒருவர். அவர்தான் தெல்லிப்பழை பொன்னையா செல்வரத்தினம். அமரராகிய இவரை எல்லோரும் "நடேசு" என்று அன்புடன் அழைப்பர். இவர் என்னுடன் பலகாலம் அன்புடன் பழகியவர். என் வெளிக் களக்கலை ஆய்வுகளுக்கு எல்லாம் தன் சொந்த மோட்டார் வண்டியில் அழைத்துச் செல்வார். மிகவும் ஆர்வத்துடன் என்னை ஊக்குவிப்பார். இவர் எனக்கு உதவியதை நான் ஒருபோதும் மறப்பதற்கில்லை. ஆடல்வல்லானின் திருவடி களின் கீழ் இவரின் உயிர் அமைதி பெறுவதாக.

அடுத்ததாக நான் குறிப்பிடப் பெரிதும் விரும்புபவர் தெல்லிப்பழை பிரபல வர்த்தகர் பொன்னையா கண்ணப் பர். இவர் அமரர் செல்வரத்தினத்தின் தம்பியார். என் பள்ளித்தோழர். இவர் எனக்குச் செய்யும் உதவி இம்மட் டன்று. நான் சோர்வுற்றிருக்கும் போதெல்லாம் "கை கொடுத்து" உதவுவார். "என்ன பயம்? என்ன சோர்வு? எல்லாம் நிறைவாகும்" எனக் கூறி எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவார். இலக்கிய வாழ்க்கையில் நான் ஈட்டிய வெற்றிக்கு எல்லாம் இவரே உறுதுணையாக அமைந்துள் ளார் என்பதை இங்கு குறிப்பிடுவதில் நான் பெருமை கொள்கின்றேன்; மகிழ்ச்சியடைகின்றேன். இவருக்கு மாவை முருகன் அருள் மேலும் கிட்டுவதாக. என் இலக்கிய முயற்சிக்குப் பெரிதும் உதவுகின்றது "குகன் அச்சகம்." இதன் முகாமையாளர் திரு. சி. நவரத்தினத்திற்கும் இங்கு பணிபுரிபவர்களுக்கும் என் நன்றி.

கந்தசாமி கோவிலடி,
தெல்லிப்பழை.
30-4-81

த. சண்முகசுந்தரம்

# மாவை முருகன் காவடிப்பாட்டு

1. பொங்குபுகழ் ஆனைமுக வடிவா — உன்றன்
   பொற்பாதம் மனதுவைத்தோம் பாலா
செங்கழனி சூழ்அளவை நடுவன் — கோயில்
   அமர்காத்த வராயன்சந் நிதியிலிருந்து
துங்கமிகு காவடியை எடுத்து — தொந்த
   பந்தமறு மாவைக்கந் தனடிசார
எங்களைநீர் காத்தருள வேணும் — ஞானக்
   கொழுந்தாகிப் பரந்தெழுந்த பொருளே.

2. சிவனம்மை வழிநடத்த நாமே — சிந்தை
   மலரிருத்திக் காவடியைத் தூக்கி
நவமாகத் தோளின்மிசை வைத்து — உன்றன்
   நலமான இசைபாடி ஆடி
பவத்துயரைப் போக்குபதி மாவைக் — கந்த
   சுவாமிபதம் நாடியருள் கூட
தவமானோர் துதிபாடும் நேயா — நேச
   அருள்புரிந்து காத்தெம்மை ஆள்வாய்.

3. கார்மகிழும் மயிற்பீலி கட்டி — வாச
   செவ்வலரி மாலைசரம் சாத்தி
சீர்கொஞ்சும் பட்டாடைக் குஞ்சம் — சிந்தைத்
   துயர்திரச் சோடனையைச் செய்து
ஏர்மிஞ்சும் பாற்செம்பு இணைத்து — பவத்
   தனைபோக்கும் காவடியைத் தூக்கி
பேர்பரவும் மாவைநகர் நோக்கி — பாடல்
   ஆடலுடன் ஆவலாய் வாறோம்.

4. பாராதி அண்டமெலாம் மகிழ — பந்த
 பாசங்கள் தூளாகிப் பறக்க
நேராக மாவையமர் கந்தா — நின்றன்
 சீர்பாதம் கட்புனலால் ஆட்டி
பேரான காவடியைத் தூக்கி — பெரும்
 பேறெய்தப் பதமலரை நாடிச்
சீரான சிந்தையுடன் வாறேம் — சிவன்
 அம்மையருள் பாலகனே ஆள்வாய்.

5. கந்தமலர்ச் சோலைநிறை மாவை — வதி
 அன்பர்தொழு செங்கிரண வேலா
எந்தன்பின் உன்புகழைப் பாடி — ஆடி
 வருமாதர் பாலர்களும் அன்பாய்
சுந்தரமாய் பாற்செம்பு குடம் — கந்தம்
 திசைபரவத் தலைவைத்துப் பணிந்து
அந்தமிலா உன்பாத சேவை — செய்யும்
 ஆவலுடன் விரைவாக வாறூர்.

6. மேளவொலி விண்ணெட்டத் தாளம் — மிகத்
 துரிதமாய் கிண்கிணிக்க ஆட்டம்
நாள்முழுதும் நினைவிருக்க நாத — சின்னம்
 சிந்தொலிக்க மத்தளமும் பம்பை
வாளனைய கண்மடவார் இடைபோல் — உடுக்கை
 தத்தகுதி தத்தகுதி கொட்ட
தூளாக வினைபோக்க அன்பர் — தெய்வ
 மறையோதி மகிழ்வாக வாறூர்.

7. அரோகரா சத்தமெங்கும் பரவ — அன்பர்
 அணியணியாய்த் திரண்டெங்கும் நிற்க
சிரந்தாழும் சீரடியார் சூழ — கந்தன்
 புகழ்பாடி மாவைநகர் நோக்கி
வருகின்ற வழிதன்னில் வாசம் — வீசு
 அம்பனை வைரவர் சந்நிதியில்
விருப்பமிகு சுவாமிபெயர் சொல்லி — ஆட்டம்
 ஆடுகின்றூர் வினையாட்டம் காண.

8. பசுந்தோகை விரித்தாடும் மயில்போல் — பரவை
கிழித்தோடும் கப்பல்போல் ஆட்டம்
திசைதோறும் தேவர்களும் நின்று — சற்றும்
இமையாது நோக்கவே நாத
இசைவெள்ளம் பெருகவே ஆட்டம் — வெகு
விற்பனமோ டாடுகின்றார் அன்பர்
நசையோடு உபசரணை செய்ய — மிகு
விரைவாக மாவைநகர் வாரார்.

9. தொல்புகழார் தெல்லிநகர்ச் சந்தி — வந்து
அம்மைமுத்து மாரியையும் வணங்கி
நல்லணியாய்ச் சூழவர நிற்க — மயிற்
காவடியும் அழகமைய நின்று
மெல்லிசையும் இயவொலியும் சேர — ஆட்டம்
ஆடுகிறார் கண்கொள்ளாக் காட்சி
வல்வினையின் வேரறுக்கும் வேலா — வெற்றி
தந்தாளும் நின்பாதம் போற்றி.

10. மயிற்றோகை கண்சிமிட்டி நிற்க — அயில்
வேலவனின் கண்ணருளில் ஆழ்த்து
பயம்போக்கும் வடிவேலைப் போற்றி — ஆடல்
செய்கின்றார் சூழ்வினைகள் போக
துயர்தீர புகழ்நாமம் சொல்லி — இன்ப
மணைகின்றார் அன்பர்கள் கூட்டம்
தயைகாட்டும் தயாபரனின் பால — ஆட்டம்
ஆடியே வருகிறார் சுவாமி.

11. வழியெல்லாம் தெருவெல்லாம் கூடி — அன்பர்
தெளிக்கின்றார் பன்னீரோ டத்தர்
செழிக்கவே தெளிக்கின்றார் அன்பர் — எங்கள்
களைப்பெல்லாம் கழியவை சுவாமி
விழிக்குள்நீ வருகின்றாய் வேலா — பழி
பாவங்கள் ஓடவே சுவாமி
பிழிகின்ற கண்ணீராய் சுவாமி — பாதம்
நணையவே வருகிறோம் சுவாமி.

12. கலைவடித்த கற்பனைகள் முருகா — உன்றன்
கலைவளர்க்கும் தத்துவங்கள் என்று
தொலைவிருந்து காவடியைச் சுமந்து — முருகா
தீதகலத் தீந்தமிழை இசைத்து
மேலையெழு கோபுரத்தின் முன்னர் — முருகா
கலைபுகலும் தத்துவங்கள் காட்டி
சால்புமிகு வாட்டங்க ளாடி — முருகா
சாந்தமுள மடைகின்றோம் முருகா.

13. திருவீதி வலமாக ஆடி — முருகா
திருவருளே இடமாக வாரேம்
அருநோய்கள் கெடவெண்ணி முருகா — அன்பர்
அணியாக மலர்மாரி பெய்ய
பெருவாதை தீரவருள் முருகா — உன்றன்
மயில்காட்டும் நடமாடி வாரோம்
திருவார்த்தை பக்தர்கள் ஓத — முருகா
பெருவார்த்தை பொருள்காட்டி வாரோம்.

14. அருட்கண்ணால் அடியோமைக்காப்பாய் — கந்தா
அயில்வேலால் வினையோட மாய்ப்பாய்
திருவாகி நாமுய்யக் கந்தா — எந்தம்
உணர்வாகி ஒன்றாக வருவாய்
மருவாசை விட்டகல கந்தா உன்றன்
மலர்ப்பாதம் கதியாக வந்தோம்
கருவாதை கட்டழிக்கும் கந்தா — சிந்தை
குருவாகி உபதேசம் தாராய்.

15. அரகரா குழந்தைவடி வேலா — ஆதி
அந்தமிலா அரும்பொருளாம் வேலா
அரவுபுனை அரனுதவும் வேலா — நாமும்
காவடியை திருமுன்னர் வைத்தோம்
பரவுபுகழ் பெருங்கருணை வேலா — திரு
மருவுபுகழ் தந்தெம்மை ஆள்வாய்
சிரங்குவிவார் உளமகிழும் மாவை — என்றும்
சிறந்தொளிர உவந்துறையும் வேலா.

16. சிந்தொலிக்கும் மாவையமர் முருகா — வினை
சிந்தவருள் தந்தாள்வாய் முருகா
வந்தனைசெய் திருவடியார் முருகா — வந்து
வந்திக்க அருள்புரிவாய் முருகா
சந்தமொடு மறைபாட முருகா — மயில்
நடமாட வந்தருள்வாய் முருகா
புந்தியளி மாலையிட முருகா — மயில்
மீதமர்ந்து ஆடிடுவாய் முருகா.

17. மாவையுறை கந்தனுக்கு அரோகரா — சாமி
நாதனுகும் ஆறுமுகற்கு அரோகரா
தேவர்தொழு கந்தனுக்கு அரோகரா — சாமி
நாதனுகும் வேலனுக்கு அரோகரா
வாகைமயில் கோலனுக்கு அரோகரா — வடி
வேல்சுமக்கும் ஐயனுக்கு அரோகரா
வள்ளிமகிழ் காந்தனுக்கு அரோகரா
யானைமகிழ் கேள்வனுக்கு அரோகரா
அரோகரா சாமி அரோகரா
அரோகரா சாமி அரோகரா.

18. மங்களஞ்சேர் மணாளனுக்கு மங்களம் — மயில்
சுமக்கும்வடி வேலனுக்கு மங்களம்
தங்கும்நற் கணபதிக்கு மங்களம் — காத்த
வராயனுகும் அப்பனுக்கும் மங்களம்
திங்களணி வேணியற்கு மங்களம் — இடப்
பங்கிலுறை பார்வதிக்கும் மங்களம்
சங்கைமிகு பாவையர்க்கும் மங்களம் — சந்தக்
கவிபாடும் அடியவர்க்கும் மங்களம்
மங்களம் சுபமங்களம் — சுப
மங்களம் சுப மங்களம்.

ஆடுமயிலே ஆணவத்தை அடக்கி
விட்டோமென்று ஆடுமயிலே
தேடுமயிலே தெய்வயானை மணவாளனைத்
தேடுமயிலே நன்கு தேடுமயிலே
ஓடுமயிலே ஓங்கார நாதன்பின்னே
ஓடுமயிலே விரைந்து ஓடுமயிலே
நாடுமயிலே நல்லகுமரன் முருகன்
பாதம் தேடுமயிலே தேடுமயிலே.

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
362